டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in
கல்யாண்
ஜுவல்லர்ஸ்
agridoctor.in | 18.07.2026 சனிக்கிழமை | பக்கங்கள் 28 | RNI No.TNTAM/2012/49602 | Vol.14, Issue : 026 - Madurai | Online Edition

# கடந்த ஆண்டில் 44 பயிர் வகைகளில் 386 மேம்படுத்தப்பட்ட ரகங்களை இந்திய வேளாண் ஆராய்ச்சிக் குழுமம் உருவாக்கியுள்ளது

## மத்திய அமைச்சர் சிவ்ராஜ் சிங் சௌகான் தகவல்

புதுதில்லி, ஜூலை 17

வளர்ச்சியடைந்த இந்தியா 2047 என்ற தொலைநோக்குப் பார்வையை நனவாக்கும் வகையிலும், அறிவியல் சார்ந்த பருவநிலை மாற்றத்தை எதிர்கொள்ளக்கூடிய விவசாயிகளுக்கு உகந்த வேளாண் வளர்ச்சியை முன்னெடுப்பதற்கான உறுதிப் பாட்டை மீண்டும் வலியுறுத்தும் வகையிலும், இந்திய வேளாண் ஆராய்ச்சிக் குழுமம் (ஐசிஏஆர்) புதுதில்லியில் தமது நிறுவன தினத்தைக் கொண்டாடியது. 1928-ம் ஆண்டு ஜூலை 16-ம் தேதி ஐசிஏஆர் நிறுவப்பட்டதை நினைவு கூரும் வகையில் ஆண்டு தோறும் இது கொண்டாடப்படுகிறது.

இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக பங்கேற்று பேசிய மத்திய வேளாண், விவசாயிகள் நலன் ஊரக மேம்பாட்டுத்துறை அமைச்சர் சிவ்ராஜ் சிங் சௌகான், இந்திய வேளாண் துறை மாற்றத்தில் ஐசிஏஆர் முன்னோடியாக திகழ்கிறது என்று கூறினார். உணவு தானியம், தோட்டக்கலை, பால், மீன்வள உற்பத்தி ஆகியவற்றில் நாட்டில் ஏற்பட்டுள்ள சாதனை அளவிலான முன்னேற்றங்களுக்கு இக்குழுமத்தின் அறிவியல் ஆராய்ச்சிகளும் கண்டுபிடிப்புகளும் சிறந்த பங்களிப்பைக் கொண்டுள்ளதாகக் கூறினார்.

கடந்த ஆண்டில் ஐசிஏஆர் 44 பயிர் வகைகளில் 386 மேம் படுத்தப்பட்ட ரகங்களை உருவாக்கி உள்ளதாகத் தெரிவித்தார். அவற்றில், 94 சதவீதம் பருவநிலை மாற்றத்தை எதிர்கொண்டு வளரக்கூடியவை என்றும் 29 ரகங்கள் உயிரி செறிவூட்டப் பட்டவை என்றும் குறிப்பிட்டார்.

# விவசாயிகள் ஒருங்கிணைந்த உரம் மேலாண்மை உடன் சமச்சீர் விகிதத்தில் அனைத்து வகையான உரங்களை பயன்படுத்த வேளாண்மை துறை அறிவுரை



பெரம்பலூர், ஜூலை 17

பெரம்பலூர் மாவட்டத்தில் பெரம்பலூர் வேளாண்மை இணை இயக்குனர் பாபுவின் அறிவுரையின்படி வேளாண்மை உதவி இயக்குனர் தர கட்டுப்பாடு அக்ரி டாக்டர் ராதாகிருஷ்ணன் தனியார் உர விற்பனை நிலையத்துக்கு வந்துள்ள ஃபேக்ட் நிறுவனத்தின் மூலம் வந்துள்ள டிஏபி மற்றும் அமோனியம் சல்பேட் ஆய்வு செய்தார் .ஆய்வின் போது தற்போது உரங்களின் ஒரு மூட்டையின் விலை யூரியா ரூ.266.50 பைசா, டிஏபி ரூ.1350, பொட்டாஷ் ரூ.2200, கூட்டு உரங்கள் 20: 20:0:13 ஸ்பீக், ஃபேக்ட், ரூ.2100, மற்ற நிறுவனங்கள் ரூ.2150, 15 :15: 15 ரூ.2200, 10:26:26: ரூ.2250, ட்ரிபிள் சூப்பர் பாஸ்பேட் ரூ.350, சூப்பர் பாஸ் பேட் குருணை ரூ.775 மற்றும் அமோனியம் சல்பேட் ரூ.1400. ரசாயன உரங்களின் விலைகள் அவ்வப்போது மாறுவதால், விவ சாயிகள் உரம் வாங்கும் போது உரம் மூட்டையில் உள்ள அதிகபட்ச விலைக்கு மேல் வாங்காமல் வாங்க வேண்டாம். ரசாயன உரங் களின் விலைகள் மிக அதிக அளவில் இருப்பதால், விவசாயிகள் ஒருங்கிணைந்த உரம் மேலாண்மையுடன், சமச்சீர் விகிதத்தில் அனைத்து வகையான இயற்கை மற்றும் உயிர் உரங்களுடன், குறைவான ரசாயன உரங்களை பயன்படுத்தி, அதிக மகசூல் பெறலாம் மற்றும் மண்வளத்தின் காக்கலாம். உரங்களை வாங்கும் போது, கண்டிப்பாக ஆதார் கார்டு கொண்டு பிஓஎஸ் இயந்திரம் மூலம் விற்பனை பில் அதில் தங்களின் முகவரி மற்றும் தொலை பேசி என்னுடன் வாங்க வேண்டும். ஆதார் கார்டு இல்லாமல் உரங்கள் வாங்க முடியாது. விவசாயிகள் உரங்கள் மேற்கண்ட உரிமம் பெற்ற உர விற்பனை நிலையங்களில் மட்டுமே உரங்கள் வாங்க வேண்டும். விவசாயிகள் யூரியா உரத்தை அதிகமாக பயன்படுத்தக்கூடாது. அடி உரமாக பயன்படுத்தக்கூடாது, அடி உரமாக காம்ப்ளக்ஸ், ட்ரிபிள் சூப்பர் பாஸ்பேட், டிஏபி உரங்களையும் பயன்படுத்த வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் யூரியா உரம் கலைக்கொல்லியுடன் சேர்த்து பயன்படுத்தக் கூடாது.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

விவசாயிகள் அவர்களின் பயிர் சாகுபடி பரப்புக்கு ஏற்ற வகையில் மட்டுமே யூரியாவை பயன்படுத்த வேண்டும். அதிகபட்சமாக ஒரு ஏக்கருக்கு யூரியா இரண்டு மூட்டைக்கு மேல் பயன்படுத்த வேண்டாம். டிஏபி உரங்களும் அதிக அளவு விவசாயிகள் வாங்க கூடாது. பயிரின் அளவிற்கு தகுந்தார் போல் அடி உரமாக பயன் படுத்தலாம். யூரியா மற்றும் டிஏபிக்கு பதிலாக யூரியா, நானோ டி ஏ பி விவசாயிகள் பயன்படுத்துவதால், உர செலவு குறைத்து, மண் வளத்தை காத்து, அதிக மகசூல் பெறலாம். வேளாண்மை விரிவாக்க மையத்தில் கிடைக்கக்கூடிய அனைத்து வகையான உயிர் உரங் களையும், அனைத்து வகையான பயிருக்கு ஏற்ற நுண் ஊட்டச் சத்து உரங்களை பயன்படுத்துவதால் பயிருக்கு வழங்கப்படும் உரம் அளவை குறைத்து, மண்ணின் வளம் அதிகரித்து உர செலவு குறைத்து அதிக மகசூல் பெறலாம்

சில்லறை உரம் விற்பனையாளர்கள், மொத்த உரம் விற்பனை யாளர்களிடம் உரம் வாங்கும் போது, அனுமதி பெற்ற விற்பனை நிலையத்துக்கு இன்வாய் உடன் வாங்கும் போது இன்வாய்ஸில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் உள்ள விற்பனை நிலையத்தில் மட்டுமே உரங்களை இருப்பு வைக்க வேண்டும், வேறு ஒரு உரிமம் பெற்ற நிலையத்தில் இருப்பு வைத்திருந்தால் அது தரக்கட்டுப்பாட்டு சட்டத்தின் படி மீறிய செயலாகும். இப்படி இருப்பதை அறியப்பட்டால் உரிமம் ரத்து செய்யப்படும். அனைத்து உரம் விற்பனையாளர் களும் கண்டிப்பாக ஆதார் கார்டு கொண்டு பி ஓ எஸ் பில் போட்டு, விவசாயிகளுக்கு கண்டிப்பாக உரம் வாங்கியதற்கான விற்பனை பில் அவசியம் தர வேண்டும். உரங்கள் விற்பனை செய்யும்போது விற்பனை பில் முகவரி மற்றும் தொலைபேசி நம்பர் இல்லாமல் விற்பனை செய்யப்படுவது, அனுமதி பெறாத இடத்தில் உரம் இருப்பு வைப்பது, விற்பனை விலைப் பலகை பராமரிக்காமல் இருப்பது அறிந்தால், உரக்கட்டுப்பாட்டு சட்டத்தின் படி நடவடிக்கை எடுக்கப் படும். சில்லரை உரம் விற்பனையாளர்கள் விற்பனை நிலையத்தில் இருப்பு பதிவேடு இருப்பு, பி ஓ எஸ் இயந்திரத்தின் இருப்பு, உண்மை இருப்பு உரங்கள் எப்போதும் சரியாக வைத்திருக்க வேண்டும். விற்பனை பில் கண்டிப்பாக விவசாய முகவரி இல்லாமல் விற்பனை செய்யக்கூடாது. உரம் விற்பனை நிலையத்தில் உரக்கட்டுப்பாட்டு சட்டத்தின் படி நடக்கவில்லை என்றால், ஆய்வின்போது உரிய நடவடிக்கை எடுத்து உரம் உரிமம் தற்காலிகமாக ரத்து செய்யப் படும் என்று வேளாண்மை உதவி இயக்குனர் தரக்கட்டுப்பாடு அக்ரி டாக்டர் ராதாகிருஷ்ணன் கூறினார்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

## சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# குறுவை நெல் பயிருக்கான பாரதப் பிரதமரின் பயிர் காப்பீட்டுத் திட்ட முகாம்

அரியலூர், ஜூலை 17

அரியலூர் மாவட்டம், திருமானூர் வட்டாரம், திருமழபாடி கிராமத்தில் குறுவை நெல் பயிருக்கான பாரதப் பிரதமரின் பயிர் காப்பீட்டுத் திட்ட முகாம், அரியலூர் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் உலகம்மை முருகக்கனி தலைமையில் நடைபெற்றது. இந்த முகாமில் வேளாண்மை இணை இயக்குநர் கூறியதாவது, விவசாயிகள் இயற்கை பேரிடரால் மகசூல் இழப்பு ஏற்படும் நிலையில் இழப்பீட்டுத் தொகை பெறுவதற்கு பயிர் காப்பீடு செய்ய வேண்டும்.



ஏலாக்குறிச்சி மற்றும் திருமானூர் பிர்க்கா விவசாயிகள் குறுவை நெல் பயிரைக் காப்பீடு செய்யலாம். இதற்கான பிரீமியம் தொகை ஏக்கருக்கு ரூ.617/-. மேலும் ஏலாக்குறிச்சி மற்றும் கீழப்பழூர் பிர்க்காவில் நிலக் கடலை சாகுபடி செய்துள்ள விவசாயிகள் பிரீமியம் தொகையாக ஏக்கருக்கு ரூ.522/- ஆகும். ஏலாக்குறிச்சி பிர்க்காவில் உளுந்து பயிர் சாகுபடி செய்துள்ள விவசாயிகள் பிரீமியம் தொகை ஏக்கருக்கு ரூ. 374/- ஆகும்.

மேற்கூறிய பயிர்களுக்கு காப்பீடு செய்ய கடைசி நாள் 31.07.26. கடன் பெறும் விவசாயிகளின் காப்பீட்டு பிரீமியத்தை விவசாய கடன் அளித்த வங்கிகளே காப்பீடு நிறுவனத்துக்கு செலுத்தி காப்பீடு செய்ய வேண்டும்.

கடன் பெறா விவசாயிகள் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி/தேசிய மயமாக்கப்பட்ட வங்கி/பொதுச்சேவை (CSC) மையத்தில் வேண்டிய ஆவணங்களை சமர்ப்பித்து பிரீமியம் செலுத்தி இத்திட்டத்தில் சேரலாம்.

**வங்கிக் கடன் பெறா விவசாயிகள் சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள் :**

1. முன்மொழிவு படிவம் மற்றும் விவசாயி பதிவு படிவம்

2. வங்கிக் கணக்கு புத்தக முதல் பக்க நகல் (வங்கிக் கணக்கு ஆதார் எண்ணுடன் இணைக்கப்பட்டிருக்க வேண்டும்)

3.கிராம நிர்வாக அலுவலர் வழங்கிய சிட்டா/அடங்கல்.

4.ஆதார் அட்டை நகல்

காப்பீடு செய்ய கடைசி தேதிக்கு முன்பாக விவசாயிகள் தங்கள் றுவை நெல், நிலக்கடலை, உளுந்து ஆகிய பயிர்களை காப்பீடு செய்யுமாறு வேளாண்மை இணை இயக்குநர் தெரிவித்தார்.

# மக்காச்சோளத்தில் படைப்புழு மேலாண்மை பற்றிய வெளிவளாக பயிற்சி



கடலூர், ஜுலை 17

கடலூர் மாவட்டம், வேளாண்மை அறிவியல் நிலையம், விருத்தாசலம் சார்பாக மக்காச் சோளத்தில் படைப் புழு மேலாண்மை பற்றிய வெளிவளாக பயிற்சி 17.07.26 அன்று மங்களூர் வட்டாரம், கூ.ஏந்தல் கிராமத்தில் நடைபெற்றது.

இப்பயிற்சியில் மூத்த விஞ்ஞானி மற்றும் தலைவர் முனைவர் க.நடராஜன், வேளாண்மை அறிவியல் நிலையத்தின் முக்கிய குறிக்கோள்கள் மற்றும் அதிக மகசூல் தரும் உயர்தர இரகங்கள் பற்றியும், விதை உற்பத்தி செய்யும் முறைகள் பற்றியும் விரிவாக எடுத்துரைத்தார். விவசாயிகளுக்கு மக்காச்சோளத்தில் படைப் புழு மேலாண்மை பற்றி தெளிவாக எடுத்துரைத்தார்.

மக்காச்சோள பயிருக்கு ஒவ்வொரு 10 வரிசைக்கும் 75 செ.மீ இடைவெளிவிட வேண்டும் இதனால் பூச்சிகொல்லி தெளிப்ப தற்கு ஏதுவாக அமையும், மேலும் வரப்பு பயிராக கம்பு நேப்பியர் பயிர் செய்யவும், ஊடுப்பயிராக உளுந்து மற்றும் பச்சை பயிறு செய்யுமாறும் மற்றும் படைப்புழுக்களை கவர்ந்து இழுக்கும் இனக்கவர்ச்சி பொறிவைக்குமாறும் வலியுறுத்தினார்.

மேலும் ஒருங்கிணைந்த பயிர் பராமரிப்பு மற்றும் பூச்சி, நோய் மேலாண்மை பற்றியும் விவசாயிகளுக்கு விளக்கமாகவும், செயல்முறையாகவும் காண்பிக்கப்பட்டது. வேளாண்மை உதவி இயக்குநர் (பொ) மங்களூர், உதவி வேளாண்மை அலுவலர்கள் மற்றும் தனுக்கா உர நிறுவனமும் இணைந்து இப்பயிற்சியை ஒருங்கிணைந்து நடத்தினர். இறுதியாக விவசாயிகள், வேளாண் விஞ்ஞானி களிடம் தனது ஐயங்களை கேட்டு தெளிவு பெற்றனர். பயிற்சியில் கடலூர் மாவட்ட மங்களூர் வட்டாரம், கூ.ஏந்தல் கிராமத்தில், உள்ள விவசாயிகள் 60-க்கும் மேற்பட்டோர் கலந்துக் கொண்டு பயன்பெற்றனர்.



# இயற்கை வேளாண்மை திருவிழா 2026

கரூர், ஜுலை 17

கரூர் கொங்கு மஹாலில் இயற்கை வேளாண்மை திருவிழா 2026 மற்றும் நம்மாழ்வார் வானகம் சார்பில் கண்காட்சி மற்றும் கருத்தரங்கம் 19.7.26 அன்று கொங்கு கரூர் கொங்கு மண்டபத்தில் நடைபெறுகிறது.

விழாவில் முக்கிய பேச்சாளர்களாக பேராசிரியர் சம்பத்குமார், பாமையன், பிரியா ராஜநாராயணன், வானகம் ரமேஷ், முருங்கை அரசி, மைக்ரோ கிரீன் தி.யுவராஜ் தட்சிணாமூர்த்தி, கேத்தனூர் பழனிச்சாமி ஆகியோர் சிறப்பு பேச்சாளர்களாக சிறப்புரை ஆற்ற வருகை புரிகின்றனர். விழாவில் கலை நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளன. முக்கியமாக கிராமிய நடனம் நடைபெற உள்ளது.




# சொர்ணவாரி நெல் பயிரில் பூச்சி நோய் பாதிப்பு

திருவள்ளூர், ஜுலை 17

திருவள்ளூர் மாவட்டம், கடம்பத்தூர் வட்டாரத்தில் நடப்பு சொர்ணவாரி பருவத்தில் 6000 ஏக்கர் சாகுபடி செய்யப்பட்டு தூர் கட்டும் மற்றும் கதிர் வெடிக்கும் வளர்ச்சி நிலையில் உள்ளது, தற்போது அதிகரித்து வரும் வெப்பநிலை காரணமாக இலை பேனின் பாதிப்பு ஆங்காங்கே காணப்படுகிறது, பாதிக்கப்பட்ட வயலில் இலையில் வெளிர் மஞ்சள் மற்றும் வெண்மை நிறக் கோடுகள் காணப்படுவது உடன் இலை நுனியில் இருந்து காய்வது போன்ற அறிகுறிகள் காணப்படும், பாதிப்பு அதிகமாக காணப்படும் வயல்களில் கீழ்க்கண்ட ஏதேனும் ஒரு மருந்து தெளித்து கட்டுப்படுத்தலாம்.

**ஒரு ஏக்கருக்கு :** ப்ரோபார்கைட் 57 இ.சி, 500 மி.லி, / ஈதையான் 50 இசிஸ் 250 மி.லி. / ஸ்பைரோமெஸ்பெண் 22.5 இசி 250 மி.லி.

# மண்ணுக்கு தேவை மருத்துவ பரிசோதனை

## வளமான மண் - வளமான விளைச்சல்



மனிதர்களுக்கு உடல்நலனை அறிய மருத்துவப் பரிசோதனை அவசியமானது போல, பயிர்களின் ஆரோக்கியத்தையும் அதிக மகசூலையும் உறுதி செய்ய மண் பரிசோதனை மிகவும் அவசியம். மண்ணில் உள்ள, கார அமிலத்தன்மை (pH), உப்புத்தன்மை (EC), கரிமக் கார்பன், ஊட்டச்சத்துக்களின் அளவு மற்றும் நுண்ணூட்டச்சத்துக்களின் நிலையை மண் பரிசோதனை மூலம் அறியலாம்.

பயிர் சாகுபடியைத் தொடங்குவதற்கு முன் மண்பரிசோதனை செய்வது மிகவும் அவசியம். குறிப்பாக அறுவடை முடிந்து, புதிய பயிருக்கு உரமிடுவதற்கு முன் மண் மாதிரியை சேகரித்து பரிசோதனை செய்வது சிறந்தது. பொதுவாக 3 ஆண்டுகளுக்கு ஒருமுறை மண்பரிசோதனை செய்து மண் வள அட்டையைப் புதுப்பித்துக் கொள்ள வேண்டும். மேலும், பயிர் மாற்றம் மேற்கொள்ளும் முன், புதிய பயிர்களை சாகுபடி செய்யத் திட்டமிடும் போது அல்லது பயிர்களில் ஊட்டச்சத்து குறைபாடு அறிகுறிகள் தென்படும்போதும் மண்பரிசோதனை செய்வது நல்லது. மண் மாதிரியை உரமிட்ட உடனேயோ அல்லது மழை பெய்த உடனேயோ எடுக்கக் கூடாது. உரமிட்ட பிறகு 30-45 நாட்கள் இடைவெளி விட்டு, வயலின் பல இடங்களில் இருந்து மண் மாதிரியை சேகரித்து பரிசோதனைக்கு அனுப்ப வேண்டும். இதன் மூலம் மண்ணின் உண்மையான வளத்தை அறிவியல் அடிப்படையில் அறிய முடியும். மண் வள அட்டை (Soil Health Card) என்பது விவசாய நிலத்தின் மண் வளத்தை அறிவியல் அடிப்படையில் மதிப்பீடு செய்து, பயிருக்கு தேவையான உரப் பரிந்துரைகளை வழங்கும் முக்கிய ஆவணமாகும். மண் பரிசோதனை செய்வதற்கு அருப்புக் கோட்டை வேளாண்மை அறிவியல் நிலையம் (79043 10808) மற்றும் வேளாண்மை துறையை (98655 72227) அணுகலாம்.

**மண்பரிசோதனையின் பயன்கள்**

● மண்ணின் உண்மையான ஊட்டச்சத்து நிலையை அறியலாம்.

● மண்ணின் கர அமிலதன்மை மற்றும் உப்புத்தன்மையை கண்டறியலாம்.

● பயிருக்கு தேவையான உரத்தின் சரியான அளவை பரிந்துரைக்க முடியும்.

● தேவையற்ற உரச் செலவை குறைக்கலாம்.

● மண் வளத்தை பாதுகாத்து நீடித்த வேளாண்மையை ஊக்குவிக்கலாம்.

● அதிக மகசூல் மற்றும் தரமான விளைபொருட்களைப் பெறலாம்.

மண்ணுக்கு மருத்துவ பரிசோதனை செய்து கொடுக்கக்கூடிய மண் வள அட்டையை பயன்படுத்தி உரமிட்டு, செலவு குறைந்து, மகசூல் அதிகரித்து, மண் வளதை நீட்டிக்குமாறு அருப்பு கோட்டை வேளாண்மை அறிவியல் நிலையத்தின் முதுநிலை விஞ்ஞானி மற்றும் தலைவர் முனைவர் ராமசுப்பிரமணியன் மற்றும் மண்ணியல் துறை தொழில்நுட்பவல்லுநர் முனைவர் கிருஷ்ணகுமார் கேட்டுகொண்டனர்.

# பயிர் காப்பீடு செய்ய விவசாயிகளுக்கு வேளாண்மை உதவி இயக்குனர் அழைப்பு

திருவள்ளூர், ஜுலை 17

பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் 2026- 27 ஆம் ஆண்டு காரீப் பருவ பயிர்களை காப்பீடு செய்ய விவசாயிகளுக்கு எல்லாபுரம் வேளாண்மை உதவி இயக்குநர் அ.உமா மகேஸ்வரி வேண்டுகோள் வைத்துள்ளார்.

எல்லாபுரம் வட்டாரத்தில் 2026 - 27 ஆம் ஆண்டு பிரதம மந்திரி பயிர் காப்பீட்டு திட்டம் காரீப் பருவத்தில் அக்ரிகல்சர் இன்சூரன்ஸ் கம்பெனி ஆப் இந்தியா லிமிட் காப்பீடு நிறுவனத்தால் செயல்பட உள்ளது.

தற்போது திருவள்ளூர் மாவட்டத்தில் குறுவை நெல், நிலக் கடலை, உளுந்து பச்சைப் பயிறு பயிர்கள் காரீப் பருவத்தில்

அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் வருவாய் கிராம அளவில் குறுவை நெல் பயிருக்கு ப்ரீமியத் தொகையான ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 615 /- பிர்கா அளவில் நிலக்கடலை பயிருக்கு ப்ரீமியத் தொகையாக ஏக்கர் ஒன்றுக்கு ரூபாய் ரூ.644/- கம்பு பயிருக்கு பிரீமியத் தொகையாக ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 252 /- உளுந்து பயிருக்கு ப்ரீமியம் தொகையான ஏக்கர் ஒன்றுக்கு ரூ.480/- பச்சைபயிறு பயிருக்கு பிரீமியம் தொகையாக ஏக்கர் ஒன்றுக்கு ரூ.480/- ஐ 31.07.2026 தேதிக்குள்ளும் செலுத்த வேண்டும். மேலும் தோட்டக்கலை பயிர்களுக்கான வாழைப் பயிருக்கு பிர்கா அளவில் பிரீமியத் தொகையாக ஏக்கர் ஒன்றுக்கு ரூ.3365/-ஐ 15.09.26 தேதிக்குள்ளும், கத்திரிக்காய் பிரீமியத் தொகையாக ஏக்கர் ஒன்றுக்கு ரூ.1235/-ஐ 31.8.26 தேதிக்குள்ளும் மற்றும் வெண்டைக்காய் பிரீமியத் தொகையாக ஏக்கர் ஒன்றுக்கு ரூ.1205/-ஐ 31.08.26 தேதிக்குள்ளும் காப்பீடு செய்ய விவசாயிகள் கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

எனவே காரீப் பருவத்தில் சாகுபடி மேற்கொள்ளும் கடன் பெறும் விவசாயிகள் அறிவிக்கை செய்யப்பட்ட பயிர்களை தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களிலோ, அல்லது தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளிலோ மற்றும் கடன் பெறா விவசாயிகள் பொது சேவை மையங்களிலும் (இ சேவை மையம்) நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவுக்குள் காப்பீடு செய்யலாம். விவசாயிகள் இத்திட்டத்தின் கீழ் பதிவு செய்யும்போது கிராம நிர்வாக அலுவலர் வழங்கும் நடப்பு பசிலிக்கான அடங்கள், விதைப்புச் சான்றிதழ், வங்கி கணக்கு புத்தகம் முதல் பக்கம் நகல், ஆதார் அட்டை நகல் ஆகியவற்றை இணைத்து பிரீமியம் தொகையை செலுத்திய பின் அதற்கான ரசீதையும் பெற்றுக் கொள்ளலாம்.

விவசாயிகள் அறிவிக்கை செய்யப்பட்ட பயிர்களை காப்பீடு செய்வதற்கான கடைசி தேதி வரை காத்திருக்காமல் முன்ன தாகவே காப்பீடு செய்யுமாறு எல்லாபுரம் வேளாண்மை உதவி இயக்குநர் தெரிவித்துள்ளார்.



Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |
|---|---|---|---|---|

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# எல்-நினோ பாதிப்பிலிருந்து வேளாண் பயிர்களை காத்திட முன்னெச்சரிக்கை நடவழிக்கை



எல்-நினோ நிகழ்வினால் காலநிலை மாற்றங்கள் இந்த ஆண்டு அதிக அளவில் 150 ஆண்டுகளுக்குப் பின் கடுமையான வறட்சியும் அதிக வெப்பமும் வேளாண் பயிர்களை பாதிக்கும் தென்மேற்கு பருவமழையும் குறையும் என இந்திய வானிலை ஆய்வு மையம் (RMD) எச்சரிக்கை விடுத்துள்ளது.

பருவமழை மிகவும் குறைந்த அளவில் பெய்யும் சூழல் உள்ளதால் தற்போது பயிர் செய்யப்பட்ட பயிர்களை எவ்வாறு பாதுகாப்பது குறித்து விரிவாக பார்ப்போம்.

**1) நெல்**

கடந்த ஆண்டைவிட சுமாராக 1 லட்சம் ஏக்கர் சாகுபடி பரப்பு குறைந்த நிலையில், நெல் சாகுபடியானது இருக்கின்ற கிணற்று பகுதியிலும் போர்வெல் பகுதிகளிலும் சாகுபடி செய்ய பட்ட குறுவை நெல் பயிரில், பயிரின் வளர்ச்சி நிலையில், 3% கயோலின் (அ) 1% பொட்டாசியம் குளோரைடு கரைசல் (KCL) இலைவழியாக தெளிப்பாக தெளிக்க வேண்டும். பிபிஎப்எம் (PPFM) என்ற நுண்ணியிர்களை ஏக்கருக்கு 200 மி.லி என்ற அளவில் 15 நாட்கள் இடைவெளியில் இலைவழி தெளிப்பாக தெளிக்க வேண்டும். மேலும் 1% தானியங்கள் (நெல்மணிகள்) முதிர்வடையதற்கு 15 நாட்களுக்கு முன்னதாக பூக்கும் பருவத்தில் 2% மோனோ அம்மோனியம் பாஸ்பேட் (MAP), பொட்டாசியம் குளோரைடு கரைசல் தெளிக்க வேண்டும்.

**2) பயறுவகை**

குறைந்த நாளில் விளையக்கூடிய பயறுவகை பயிர்களுக்கு (TNAU PULSES WONDER) பயறு வகை ஒண்டர் கலவை

ஏக்கருக்கு 2 கிலோ என்ற அளவில் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். பூப்பதற்கு முந்தைய நிலையிலும் அதன்பின் 15 நாட்கள் கழித்தும் பூ உதிர்வதை குறைப் பதற்காக 100, PPM செறிவுள்ள சாலிசிலிக் அமிலம் அல்லது 40% செறிவுள்ள (N.A.A) நாப்தலின் அசிட்டிக் அமிலம் கலவை இலைவழியாக தெளிக்க வேண்டும்.

**3) நிலக்கடலை**

பூக்கள் உதிர்வதை குறைக்கவும் காய்கள் நன்கு திரட்சி யாகவும் இருக்க, அதிகபட்சமாக பூக்கும் காலங்களில் 2 கிலோ (TNAU RICH) நிலக்கடலை ரிச் 2கிலோ நீரில் கலந்து தெளிக்க வேண்டும். மண்ணின் ஈரப்பதத்தை பாதுகாக்க வைக்கோல் பாலீத்தின் சிட் மூடாக்கு (MULCHING) மேற்கொள்ள வேண்டும்.

**மேலும் இந்த வெப்ப காலத்தில் விவசாயிகள் கடைபிடிக்க வேண்டிய வழிமுறைகள்**

1) வெப்பமான நேரங்களில் (மதியம் 12 மணி முதல் 3 மணி வரை) சாகுபடிக்கான பணிகளை வெட்ட வெளியில் செய்யக் கூடாது.

2) நண்பகலில் நீர்ப்பாசனம் செய்யக்கூடாது.

3) வெப்பத்தை தாங்க கூடிய பயிர் ரகங்கள் விதைப்பு தேதியை வழக்கமாக போல இல்லாமல் மாற்றி செய்ய வேண்டும்.

4) காய்கறி பயிர் கீரை போன்ற பயிர்களுக்கு நிழல்வலை ஏற்படுத்திட வேண்டும்.

5) சொட்டுநீர் தெளிப்புநீர் பாசன வசதிகளை ஏற்படுத்திட வேண்டும்.

6) கால்நடைகளை வெயிலில் மேய்ச்சலுக்கு அனுப்பக் கூடாது.

மேலே கண்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொண்டு இந்த எல் நினோ பாதிப்பிலிருந்து விடுபட வேண்டுகிறோம்

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# பயறுவகைப் பயிர்களில் விதை உற்பத்தி தொழில்நுட்பம் குறித்த களப்பயிற்சி



விருதுநகர், ஜூலை 17

விருதுநகர் மாவட்டம், காரியாபட்டி வட்டாரத்தின் கழுவனச்சேரி கிராமத்தில், தானம் அறக்கட்டளை ஏற்பாட்டில், வேளாண்மை அறிவியல் நிலையம் (KVK), அருப்புக்கோட்டையின் ஒத்துழைப்புடன் பயறுவகைப் பயிர்களில் விதை உற்பத்தி தொழில்நுட்பம் குறித்த களப்பயிற்சி 15.07.26 அன்று நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து கிசான் சாரதி செயலி பற்றிய விழிப்புணர்வு செய்யப்பட்டு அதில் உள்ள வாக்கு எடுப்பிலும் வெற்றிகரமாக பங்கேற்கப்பட்டது.

தொடக்க நிகழ்வில், வேளாண்மை அறிவியல் நிலையம், அருப்புக்கோட்டையின், முதுநிலை விஞ்ஞானி மற்றும் தலைவர் முனைவர் மு.ராமசுப்பிரமணியன் மற்றும் பயிர் இனப்பெருக்கம் மற்றும் மரபியல் துறை பேராசிரியர் முனைவர் ந.ஆனந்தி, பயறு வகை பயிர்களில் விதை உற்பத்தியின் அவசியத்தைப் பற்றியும் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்பங்களைப் பின்பற்றி நிலையான வேளாண்மை உற்பத்தியை மேம்படுத்துவதன் முக்கியத்துவத்தையும் எடுத்துரைத்தனர்.

இப்பயிற்சியில் தரமான விதை, விதை பெருக்க நிலைகள் பற்றியும் விரிவாக எடுத்துரைக்கப்பட்டது. அதிக மகசூல் தரும் உளுந்து மற்றும் பாசிப்பயிறு இரகங்கள் பற்றி தெளிவாக கூறப்பட்டது. விதை உற்பத்தியில் ரைசோபியம், நுண்ணுயிர் விதை நேரத்தியின் அவசியம் பற்றி விளக்கமளிக்கப்பட்டது. பயறு வகை பயிர்களில் கடைபிடிக்க வேண்டிய உழவியல் தொழில் நுட்பங்கள் பற்றியும், ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் மேலாண்மை பற்றியும் விரிவாக தெரியப்படுத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சி மூலம் விவசாயிகள் பயறு வகை பயிர்களில் விதை உற்பத்தி செய்யும் நுட்பங்களை சரியான நேரத்தில் கண்டறிந்து, அறிவியல் அடிப்படையிலான பயிர் மேலாண்மை தொழில்நுட்பங்களைப் பின்பற்றி விதை உற்பத்தியாளராக முடியும் என்ற நம்பிக்கையைப் பெற்றனர்.

மேலும், வேளாண்மை அறிவியல் நிலையம் (KVK) அருப்புக்கோட்டை மூலம், விஞ்ஞானிகளின் அறிவுரைகள் கிராமப்புறளவில்

வேளாண் தொழில்நுட்பங்கள் முழுமையாக பரவுவதற்கு இந் நிகழ்ச்சி சிறந்த வழிகாட்டுதலாக அமைந்தது. மேலும், பருத்தி, நிலக்கடலை, சோளம் சாகுபடி செய்யும் விவசாயிகளின் அந்தந்த வயலின் நிலைமைக்கு ஏற்ற தொழில்நுட்ப ஆலோசனைகள் வழங்கப்பட்டன. தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் பரிந்துரைக்கப்படும் பயறு ஒண்டர் பூக்கும் தருணத்தில் தெளிப்ப தனால் பூக்கள் உதிர்வதை குறைத்து, காய்களின் எண்ணிக்கையை அதிகரித்து, அதிக எடையுடன் விதை விளைச்சளையும் மகசூலையும் அதிகரிக்கலாம் என்றும் கூறப்பட்டது. இந்நிகழ்ச்சியில் சுமார் 30க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.




# நெல் வயல்களை பச்சைப்பாசி பாதிப்பில் இருந்து பாதுகாக்கும் வழிமுறைகள் வேளாண்மை உதவி இயக்குநர் தகவல்



திருவள்ளூர், ஜுலை 17

திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் வட்டாரத்தில் நடப்பு சொர்ணவாரி பருவத்தில் அதிக அளவில் நெல் பயிர் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. தற்போது நிலவி வரும் தட்ப வெப்பநிலைக்கு நடவு செய்ய பட்ட நெல் வயல்களில் பச்சைப்பாசி காணப்படுகின்றது. பொது வாக உவர் நிலங்களில் பச்சைப்பாசி பாதிப்பு அதிகமாக காணப் படும். அதிக வெப்பம். சூரிய ஒளி மற்றும் அடியுரம் அதிகமாக இடுதல் போன்ற காரணங்களாலும் பச்சைப் பாசி பாதிப்பு அதிகரிக்கின்றது. பச்சைப்பாசியானது நீரின் மேற்பரப்பில் அடர்த்தியாகப் படர்ந்து பயிர்களுக்கு போதிய பிராணவாயு கிடைப்பதைத் தடுக்கின்றது. இதன் மூலம் பயிர் களில் வேர் வளர்ச்சி பாதிக்கப்பட்டு பயிர் வளர்ச்சி குன்றி அழுகி விடுகின்றன.

## கட்டுப்படுத்தும் வழிமுறைகள்

பச்சைப்பாசி பாதித்த வயல்களில் விவசாயிகள் ஏக்கருக்கு 2 கிலோ காப்பர் சல்பேட்டை பாசனநீர் வாய்க்காலில் வைத்தல் அல்லது 20 கிலோ மணலுடன் கலந்து வயலில் சீராகத் தூவி கட்டுப்படுத்தலாம். இதனைத் தொடர்ந்து நான்கு நாட்களில் நீரை வடித்து களை உருட்டும் கருவி கொண்டு பாசி உள்ளமுந்து மாறு உருட்டி அழிக்கலாம். பச்சைப்பாசி பாதிப்பு, வயல்களில் தென்பட்ட உடனேயே களை எடுக்கும் பொழுது சேற்றில் அழுத்தியும், கைகளால் அகற்றியும், நீரை தேக்கி வைக்காமல் காய்ச்சல், பாய்ச்சல் முறையில் நீர் நிர்வாகம் செய்தும், உரங் களை மழை பெய்த பிறகு இடுவதன் மூலமாகவும், பச்சைப்பாசி விரைவாகப் பரவுவதைக் கட்டுப் படுத்தலாம். நாற்று நட்ட ஒரு வாரத்தில் ஏக்கருக்கு 100 கிலோ அசோலா இடுவதன் மூலம் பச்சைப்பாசி வளர்ச்சி தடைபடுகிறது.

உவர் நிலங்களில், விவசாயிகள் பயிர் சாகுபடி செய்வதற்கு முன், உவர் தன்மையை சரி செய்ய ஏக்கருக்கு 400 கிலோ ஜிப்சம் இட்டு நீரைத் தேக்கி வடித்து விட வேண்டும். சணப்பை, தக்கைப்பூண்டு, நரிப்பயறு போன்ற பசுந்தாள் உரப்பயிர்களில் ஏதேனும் ஒன்றை ஏக்கருக்கு 15 கிலோ அளவில் விதைத்து 45 ஆம் நான் மடக்கி உழுதல் அல்லது ஏக்கருக்கு 2.5 டன் பசுந் தாள் உரத்தினை கடைசி உழவின் போது இட்டு மண்வளத்தை பாதுகாக்கலாம்.

எனவே நெல் சாகுபடி செய்துள்ள விவசாயிகள் மேற்கண்ட வழிமுறைகளைப் பின்பற்றி பச்சைப்பாசி தாக்குதலில் இருந்து நெல் வயல்களை பாதுகாக்கவும் மேலும் சந்தேகங்கள் மற்றும் தொழில்நுட்ப ஆலோசனைகள் பெற எல்லாபுரம் வேளாண்மை விரிவாக்க மையத்தினை அனுகி பெற்று பயனடையுமாறும், மேலும் விவசாயிகளுக்கு தேவைப்படும் வேளாண்மை தொழில் நுட்பங்களை அறிந்து கொள்ள வட்டார தொழில்நுட்ப மேலாளர் பாஸ்கர், துணை வேளாண்மை அலுவலர் சிவகுமாரை அணுகி பெற்றுகொள்ளவும், வேளாண்மை உதவி இயக்குநர் அ உமா மகேஸ்வரி தெரிவித்துள்ளார்.

# தமிழ்நாட்டில் தற்போதைய வானிலை நிலவரம்

# வெப்ப அலை எச்சரிக்கை, மேற்குத் தொடர்ச்சி மலையில் மழை

● 19 மாவட்டங்களுக்கு வெப்ப அலை எச்சரிக்கை (மதுரை, வேலூர், காஞ்சிபுரம் உள்ளிட்டவை)

● வேலூரில் அதிக வெப்பநிலை : 41.6°C

● மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளில் மட்டும் லேசான மழை; மற்ற பகுதிகள் வறண்ட வானிலை அடுத்த சில நாட்கள் (ஜூலை 17–19):

● ஜூலை 17 அன்று இடி, மின்னல், பலத்த காற்று (40–50 கிமீ) எச்சரிக்கை

● மழை மேற்குத் தொடர்ச்சி மலையில் மட்டுமே தொடரும்

● பெரிய மாற்றம் இல்லாமல் வெப்பநிலை தொடரும்

**சுருக்கம் :** மழையை விட வெப்பமே இப்போதைய முக்கியப் பிரச்சினை.

## அடுத்த பருவத்திற்கான பயிர்ச் சாகுபடி ஆலோசனை (ஆடிப் பட்டம்)

● தற்போது ஆனி–ஆடி மாதம் நடைபெறுவதால், தமிழக அரசு 'குறுவை சாகுபடி சிறப்புத் தொகுப்புத் திட்டம் – 2026' மூலம் குறுவை நெல் சாகுபடிக்கு ஆதரவு அளித்து வருகிறது.

● இந்த மாதத்தில் பாகற்காய், சுரைக்காய், வெண்டைக்காய், தக்காளி, கொத்தவரங்காய், முள்ளங்கி, மிளகாய், பூசணிக்காய், பீர்க்கங்காய் போன்ற காய்கறிப் பயிர்கள் ஏற்றவை.

● வெப்பநிலை அதிகமாக இருப்பதால், நடவு செய்யும் பயிர்களுக்கு அதிகாலை அல்லது மாலை நேரங்களில் நீர்ப்பாசனம் செய்வது நல்லது. மதிய வெயிலில் நீர் தெளிப்பதைத் தவிர்க்க வேண்டும்.

● மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளில் மட்டும் மழை பெய்வதால், அப்பகுதி விவசாயிகள் மழை நீரைச் சேமிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். சமவெளிப் பகுதி விவசாயிகள் தற்போதைக்கு பாசன நீரையே நம்பியிருக்க வேண்டும்.


● தொடர்ந்து ஒரே பயிரை சாகுபடி செய்யாமல் மாற்றுப் பயிர் முறையைப் பின்பற்றுவது நல்லது — இது மண் வளத்தைையும் பாதுகாக்கும், நோய்க்கிருமித் தாக்கத்தையும் குறைக்கும்.

● விதைத் தரம் உறுதி செய்ய, அருகிலுள்ள விதைப் பரிசோதனை நிலையத்தில் விதை மாதிரிகளைச் சோதிக்கலாம்.



கட்டுரையாளர் : *ப.நந்தகுமார், முதுநிலை உதவிப் பேராசிரியர் (மண் அறிவியல் மற்றும் வேளாண் வேதியியல்) பயிர் மேலாண்மைத் துறை), நாளந்தா வேளாண்மைக் கல்லூரி, திருச்சி. மின்னஞ்சல் : arnandhu218@gmail.com, தே. விக்னேஷ், உதவிப் பேராசிரியர் (மண் அறிவியல் மற்றும் வேளாண்மை வேதியியல்), பயிர் மேலாண்மைத் துறை, நாளந்தா வேளாண்மைக் கல்லூரி, திருச்சி. மின்னஞ்சல் : harish vignesh143@ gmail.com*




கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# நிலையான மனித ஆரோக்கியத்தில் பசுங்கீரைகள் : முக்கியத்துவம் மற்றும் சாகுபடி நுட்பங்கள்

மனிதன் பண்டைய காலம் முதலே உணவில் கீரைகளை முக்கிய உணவாக உண்டு வந்துள்ளான். இதற்கு காரணம் அதில் உள்ள தாதுச்சத்துக்களும் சிறந்த நோய் எதிர்ப்பு காரணிகளுமே ஆகும். மேலும் இது சங்க காலம் முதலே சித்த மருத்துவத்திலும் மருந்தாக பயன்படுத்தபட்டு வந்துள்ளது. குறிப்பாக, கீரைகள் அதிக ஊட்டச் சத்து கொண்ட உணவுகளில் முக்கியமானவையாகத் திகழ்வதோடு, உலகளாவிய உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பிலும் முக்கியப் பங்காற்றுகின்றன. குறைந்த கலோரி கொண்டவையாக இருந்த போதிலும், வைட்டமின்கள், தாதுக்கள், நார்ச்சத்து, ஆன்டி-ஆக்ஸிடன்ட்டுகள் மற்றும் பைட்டோகெமிக்கல்கள் ஆகியவற்றை வழங்குவதால், இவை ஆரோக்கியமான உணவு முறையின் இன்றியமையாத கூறுகளாகக் கருதப்படுகின்றன. ஆரோக்கியமான உணவுமுறைகள் குறித்த விழிப்புணர்வு அதிகரிப்பு, நகரமயமாதல் மற்றும் செயல்பாடு சார்ந்த உணவுகளுக்கான (Functional Foods) தேவை ஆகியவை, வளர்ந்த மற்றும் வளரும் நாடுகள் என அனைத்திலும் கீரை வகைகளின் உற்பத்தி மற்றும் நுகர்வை விரைவுபடுத்தியுள்ளன. மேலும் கீரைகளின் முக்கியத்துவம், வகைகள் மற்றும் அதன் சாகுபடி நுட்பங்களை பற்றி இக்கட்டுரையில் விரிவாக காண்போம்.



## முக்கியத்துவம்

உலகளாவிய காய்கறி உற்பத்தி ஆண்டுக்கு 1.2 பில்லியன் டன்களுக்கும் அதிகமாக உள்ளது. இதில் புதிய காய்கறி உற்பத்தியில் கணிசமான பங்கு பசுமையான கீரை களுக்கே உரியது. உலகளவில், முக்கிய கீரைகளாக பாலக்கீரை, லெட்டூஸ் கீரை, சைனீஸ் முட்டைகோஸ் கீரை, கடுகுக்கீரை போன்றவை எடுத்துக்கொள்ளப்படுகிறது. மேலும் இந்தியாவில் அகத்திகீரை, முருங்கைகீரை, அரக்கீரை, சிறுகீரை, முளைக்கீரை, தண்டாங்கீரை, வெந்தயக்கீரை, பசலைக்கீரை, பாலக்கீரை, கொத்த மல்லிக்கீரை, வல்லாரை, பொன்னாங்கண்ணி போன்ற கீரைகள் உணவில் முக்கிய பங்கு வகிக்கிறது. ஆசியா இலைக் காய்கறி களின் மிகப்பெரிய உற்பத்தியாளராக உள்ளது. இது உலகளாவிய காய்கறி உற்பத்தியில் 70%க்கும் அதிகமாகப் பங்களிக்கிறது. இதைத் தொடர்ந்து ஐரோப்பா மற்றும் அமெரிக்கா கண்டங்கள்



உள்ளன. சீனா உலகின் முன்னணி உற்பத்தியாளராக உள்ளது. இது உலக ளாவிய காய்கறி உற்பத்தியில் கிட்டத்தட்ட 50% பங்களிக்கிறது. அதே நேரத்தில் இந்தியா இரண்டாவது பெரிய உற்பத்தி யாளராக உள்ளது. இதைத் தொடர்ந்து அமெரிக்கா, துருக்கி, எகிப்து மற்றும் ஸ்பெயின் போன்ற நாடுகள் உள்ளன. உற்பத்தித்திறன், தரம் மற்றும் ஆண்டு முழுவதும் கிடைப்பதை மேம்படுத்துவதற்காக, பாதுகாக்கப்பட்ட உயர் சாகுபடி நுட்பங்களாக, ஹைட்ரோபோனிக்ஸ், செங்குத்து விவசாயம் மற்றும் துல்லியமான விவசாயம் போன்றவை பெருகிய முறையில் பின்பற்றப்படுகின்றன.



### உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பில்

கீரைகளில் வைட்டமின்கள் ஏ(A), சி(C), ஈ(E), கே(K), ஃபோலேட் (இரும்புச்சத்து), கால்சியம், மெக்னீசியம், பொட்டாசியம், துத்தநாகம், ரிபோப்லேவின்கள், காரோடின்னாய்டுகள் சிறந்த ஊட்டச்சத்து மூலங்களாகத் திகழ்கின்றன. அதிகளவிலான செரி மானமாக கூடிய நார்ச்சத்து ஆரோக்கியத்தை மேம்படுத்துகிறது. குறைந்த கொழுப்பு மற்றும் கலோரி கொண்டிருப்பதால், ஆரோக் கியமான உணவுமுறைக்கு இவை மிகவும் ஏற்றவை. மனித ஆரோக் கியத்தில், பெண்களுக்கு அதிலும் குறிப்பாக வயது வந்த பெண் களுக்கு இரத்த போக்கு மற்றும் இரத்தசோகை தடுக்க பெரும் உதவி செய்கிறது. மேலும் பாலூட்டும் தாய்மார்களுக்கு சிறந்த ஆரோக் கியத்தை வழங்குகிறது. உடலில் கொழுப்புச்சத்து சேர்வதை குறைத்து இதய நோய்கள் வருவதில் இருந்து காக்கிறது. மேலும் முதியவர்களுக்கு ஏற்படும் எலும்பு தேய்மானம் மற்றும் மூட்டு வலிகளில் இருந்து பாதுகாக்கிறது. உடலில் நோய் எதிர்ப்பை ஊக்குவித்து வளர்ச்சியை மேம்படுத்துகிறது.

### விவசாயம் மற்றும் சந்தைகளில்



குறுகிய காலப் பயிர்கள் (பல வகை களுக்கு 20-45 நாட்கள்) ஆண்டு முழுவதும் பயிரிட ஏற்றவை. கலப்புப் பயிர் மற்றும் ஊடுபயிர் முறைகளுக்கு ஏற்றவை. வீட்டுத் தோட்டங்கள் மற்றும் நகர்ப்புறச்–சார்ந்த விவசாயத்திற்கு ஏற்றவை. சிறு மற்றும் குறு விவசாயி களுக்கு வருமானம் ஈட்டித் தரக்கூடியவை. உள்ளூர் சந்தைகளில் நுகர்வோரிடமிருந்து அதிக தேவை, அடிக்கடி அறுவடை செய்வதன் மூலம் சீரான வருமானம் கிடைக்கிறது.

உலர்த்தப்பட்ட கீரைகள், பொடிகள், ஊட்டச்சத்து மருந்துகள் (nutraceuticals) மற்றும் உடனடி உணவுகளில், இதன் மதிப்பு கூட்டப் பட்ட தயாரிப்புகளுக்கான வாய்ப்புகள் மிகப்பெரியது. சுற்றுச்சூழல் மற்றும் பல்லுயிர் பாதுகாப்பில் பல்வேறு வேளாண்-காலநிலை மண்டலங்களுக்கு ஏற்றவாறு தகவமைந்துள்ள பல வகையான உள்நாட்டு பசுங்கீரைகளைத் தமிழ்நாடு பாதுகாத்து வருகிறது. இத்தகைய வகைகளை ஊக்குவிப்பது : பாரம்பரிய மரபணு வளங்களைப் பாதுகாக்கிறது. காலநிலை மாற்றத்தைத் தாங்கும் திறனை வலுப்படுத்துகிறது. உணவுப் பன்முகத் தன்மையையும் உள்ளூர் உணவு அமைப்புகளையும் மேம்படுத்தி பாதுகாக்கிறது.



### சாகுபடி முறை

கீரைகள் நல்ல ஊட்டச்சத்துக்கள் நிறைந்த, வடிகால் வசதிகொண்ட நிலங்களில் மட்டுமே விவசாயம் செய்யப்படுகிறது. தமிழ்நாட்டில் அனைத்து வகையான கீரை வகைகளும் சாகுபடி செய்யப்படுகிறது. குறிப்பாக மேற்கு தொடர்ச்சி மலைகளை ஒட்டிய மாவட்டங் களில் பெருமளவு விளைவிக்கப்படுகிறது. இங்கு அதிகமாக அரைக்கீரை, முளைக்கீரை, வெந்தயக்கீரை, தண்டுக்கீரை மற்றும் பொன்னாங்கண்ணி போன்றவை அதிகளவில் சாகுபடி செய்யப் பட்டு விற்பனை செய்யப்படுகிறது. நிலம் நன்கு மென்மையான முறையில் பண்படுத்தப்பட்டு, 2 மு 1.5 மீட்டர் அளவுள்ள பாத்திகள் அமைக்கப்படுகின்றன. நிலத்தினை தயாரிக்கும் பொழுதே நன்கு மக்கிய மாட்டுச்சாணம் 25.0 டன்/ஹெ. மற்றும் அசோஸ்பைரில்லம் (அல்லது) பாஸ்போபாக்டீரியா 2.0 கி /ஹெ. இதனுடன் நைட்ரஜன் 75.0 கி /ஹெ. , பொட்டாசியம் 25.0 கி /ஹெ. ஆகியவற்றை சேர்த்து அடியுரமாக இடவேண்டும்.

### பயிர் செய்யும் காலம் மற்றும் ரகங்கள்

கீரைகளை ஆண்டு முழுவதும் பயிர் செய்யலாம். தமிழகத்தில் கோ1, கோ2, கோ3, கோ4, கோ5 போன்ற ரகங்கள் சாகுபடி செய்யப்படுகின்றன.

### நீர் மேலாண்மை

விதைப்பதற்கு முன்பும் பின்பும், மற்றும் முளைத்த பிறகு வாராந்திர இடைவெளியிலும் நீர்ப்பாசனம் செய்யவும்.

### பூச்சி மற்றும் நோய் மேலாண்மை

இலைகளை உண்ணும் கம்பளிப்பூச்சிகளை ஒரு லிட்டர் நீருக்கு 2 கிராம் என்றளவில் கார்பரில் 50 WP (Carbaryl 50 WP)-ஐத்

தெளிப்பதன் மூலம் இதைக் கட்டுப்படுத்தலாம். இலைப்புள்ளி நோயினை கட்டுப்படுத்த கார்பென்டசிம் மருந்தினை 0.1% என்றளவில் தெளிக்க வேண்டும்.

### அறுவடை மற்றும் மகசூல்

முளைக்கீரை மற்றும் தண்டுக்கீரையினை நட்டத்தில் இருந்து 25 (மற்றும்) 40 நாட்களில் 25 டன்கள்/ஹெ. (மற்றும்) 40 டன்கள்/ஹெ. என்றளவில் மகசூல் செய்யலாம்.

### சுருக்கவுரை

கீரைகள், நீடித்த உணவு முறைகளின் இன்றியமையாத கூறுகளாகும். அவை சிறப்பான ஊட்டச்சத்து, மருத்துவ, பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் நன்மைகளை வழங்குகின்றன. அத்தியாவசிய வைட்டமின்கள், தாதுக்கள், நார்ச்சத்து, ஆன்டிஆக்ஸிடன்ட்கள் மற்றும் பல்வேறு தாவர வேதிப்பொருட்கள் நிறைந்த கீரைகளைத் தொடர்ந்து உட்கொள்வது, நுண்ணூட்டச்சத்து குறைபாடுகளைத் தடுக்கவும், இதய நோய்கள், நீரிழிவு, உடல் பருமன், எலும்புப்புரை மற்றும் சில புற்றுநோய்கள் போன்ற தொற்றா நோய்களின் அபாயத்தைக் குறைக்கவும் உதவுகிறது. இவற்றை அன்றாட உணவில் சேர்த்துக்கொள்வது நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரித்து, குடல் ஆரோக்கியத்தை மேம்படுத்தி, ஒட்டுமொத்த மனித நலனையும் ஆதரிக்கிறது. இதனால், கீரைகள் ஆரோக்கியமான மற்றும் சமச்சீரான ஊட்டச்சத்தின் ஒரு முக்கிய அங்கமாகத் திகழ்கின்றன.

வேளாண் கண்ணோட்டத்தில், கீரை வகைகள் என்பவை குறைந்த காலப்பயிர்களாகவும், வளங்களைச் சிக்கனமாகப் பயன்படுத்தும் பயிர்களாகவும் உள்ளன. இவற்றை மரபுசார், இயற்கை, பாதுகாக்கப்பட்ட சூழல், ஹைட்ரோபோனிக்ஸ் (மண்ணில்லா வேளாண்மை) மற்றும் நகர்ப்புற வேளாண்மை போன்ற பல்வேறு வேளாண்-காலநிலைச் சூழல்களில் பயிரிட முடியும். இவற்றின் தகவமைப்புத் திறன், விரைவான வளர்ச்சி மற்றும் அதிகப் பொருளாதார வருவாய் ஆகியவை சிறு விவசாயிகளுக்கு நிலையான வாழ்வாதார வாய்ப்புகளை வழங்குவதோடு, உள்ளூர் மற்றும் பிராந்திய உணவுப் பாதுகாப்பையும் வலுப்படுத்துகின்றன. மேலும், உள்நாட்டு மற்றும் காலநிலை மாற்றத்தைத் தாங்கி வளரக்கூடிய கீரை வகைகளைச் சாகுபடி செய்வது, பல்லுயிர் பாதுகாப்பு, வளங்களின் திறமையான பயன்பாடு மற்றும் மாறிவரும் காலநிலையிலும் உறுதியான வேளாண் உற்பத்தியை உறுதி செய்தல் ஆகியவற்றிற்குப் பங்களிக்கிறது.

எதிர்காலத்தைக் கருத்தில் கொள்ளும் போது, காலநிலைக்கேற்ற சாகுபடி முறைகள், துல்லிய வேளாண்மை, மேம்பட்ட பயிர் ரகங்கள்,

நிலையான ஊட்டச்சத்து மற்றும் நீர் மேலாண்மை மற்றும் மதிப்புக்கூட்டும் தொழில்நுட்பங்கள் ஆகியவற்றை ஒருங்கிணைப்பது கீரை வகைகளின் உற்பத்தித் திறன், தரம் மற்றும் கிடைக்கும் தன்மை ஆகியவற்றை மேலும் மேம்படுத்தும். அதே வேளையில், இவற்றின் உற்பத்தியையும் நுகர்வையும் ஊக்குவிக்க பொது விழிப்புணர்வு, ஆதரவான கொள்கைகள் மற்றும் ஊட்டச்சத்து சார்ந்த வேளாண் முன்னெடுப்புகள் ஆகியவை அவசியமாகும்.

பசுமை இலைக் காய்கறிகளின் சாகுபடி மற்றும் உணவுப் பயன்பாட்டை விரிவுபடுத்துவது, நிலையான வேளாண்மை, ஊட்டச்சத்து பாதுகாப்பு, மேம்பட்ட பொது சுகாதாரம் மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் நிலையான வளர்ச்சி இலக்குகளை (றீம்றூவி) அடைவதில் முக்கிய பங்காற்றும். இதன் மூலம் ஆரோக்கியமான மக்கள் சமூகத்தையும், வருங்கால சந்ததியினருக்கான வலுவான உணவு அமைப்புகளையும் உருவாக்க பங்களிக்க முடியும்.

***மேலும் சாகுபடி, பயிர் பாதுகாப்பு மற்றும் சந்தை விபரங்களுக்கு, முனைவர் பெ.முரளி சங்கர், (உதவிப் பேராசிரியர்) நோயியல் துறை, முனைவர் ரா.கவுசல்யா, (உதவிப் பேராசிரியர்) தோட்டக் கலைத் துறை, முனைவர் பெ.மு.சுரேஷ்குமார், (துணைப் பேராசிரியர்) தோட்டக்கலைத் துறை, முனைவர் பா.ராகுல், (உதவிப் பேராசிரியர்) தோட்டக்கலைத்துறை, ஆர்.வி. எஸ். தோட்டக்கலைக் கல்லூரி, செம்பட்டி - 624 707 மற்றும் முனைவர் வி.சாதனா, (துணைப் பேராசிரியர்) பூச்சியல் துறை, புஷ்கரம் வேளாண் அறிவியல் கல்லூரி, புதுக்கோட்டை - 622 303.***



# எல்நினோவால் அதிகரிக்கும் வெப்பநிலை மற்றும் அனல் காற்றிலிருந்து பயிர்களை காப்பது எப்படி?





செங்கல்பட்டு, ஜூலை 17

செங்கல்பட்டு மாவட்டம், திருக்கழுக்குன்றம் வட்டாரத்தில் எல்நினோ நிகழ்வால் வெப்பநிலை அதிகமாகவும் அனல் காற்றும் வீசிக்கொண்டிருக்கிறது. இவ்வாறான கடுமையான வெயிலின் தாக்கம் மற்றும் அனல் காற்றிலிருந்து விவசாயிகள் தங்கள் பயிர்களை பாதுகாக்க பயிர் களுக்கு பகல் நேரங்களில் தண்ணீர் பாய்ச்சுவதை தவிர்க்க வேண்டும். குறிப்பாக நடவு செய்த நெல் வயல்கள் மற்றும் இளம் பயிர்களுக்கு பகலில் தண்ணீர் பாய்ச்சுவதை அறவே தவிர்க்க வேண்டும். பகலில் இளம் பயிர்களுக்கும், நடவு செய்த வயல்களுக்கும் தண்ணீர் பாய்ச்சுவதால் தண்ணீர் சூடாகி கொதிப்பின் காரணமாக பயிர்கள் பச்சைப் பிடிக்காமல் இறந்து அழுகிவிடும்.

எனவே பயிர்களுக்கு மாலை மற்றும் இரவு நேரங்களில் தண்ணீர் பாய்ச்ச வேண்டும். பகலில் வயல்கள் தண்ணீரின்றி ஈரப்பதத் தோடும், காற்றோட்டமான சூழலிலும் இருத்தல் அவசியம். மேலும் நெல் பயிர்கள் வாடாமல் இருக்கவும் ஒளிச்சேர்க்கை நன்றாக நடைபெறவும் கயோலின் 30 கிராம்/லிட்டர் அல்லது பொட்டாசியம் குளோரைடு 10 கி/லிட்டர் ஏதேனும் ஒன்றை இலை வழியாக தெளிக்க வேண்டும். பயிர்களின் முக்கிய வளர்ச்சி நிலைகளான தூர்கட்டும் பருவம் மற்றும் கதிர் பருவங்களில் கட்டாயம் தெளிக்க வேண்டும். இவ்வாறு செய்வதால் பயிர்களின் உஷ்ணத்தை குறைக்க முடியும்.

குறுவை சாகுபடி பருவத்தில் நெல் பயிருக்கு வளர்ச்சி நிலையில் 1 % பொட்டாசியம் குளோரைடுடன் 500 PPFM (500 மி.கி/லி) சைக்கோசெல் தெளிப்பதால் பயிர்களுக்கு வளர்ச்சி ஊக்கியாக செயல்படுவதோடு வறட்சியை தாங்கி வளரும் திறனும் அதிகரிக்கும். வளர்ச்சி பருவத்தில் நுண்ணுயிர் உரம் பயன்பாடு கட்டாயம் தேவை. வறட்சி மற்றும் அதிக வெப்பநிலையை தாங்கும் வல்ல நுண்ணுயிர் (PPFM) மெத்தைலோ பாக்டீரியம் ஏக்கருக்கு 200 மிலி பூக்கும் பருவத்திலும் கதிர் பருவத்திலும் தெளிக்க வேண்டும்.

இவ்வாறு செய்வதால் அதிகப்படியான வெப்பத்தினால் தானியம் பதறாவதை தடுக்கும் மற்றும் நெல் மணிகள் அதிக திறட்சியாக உருவாகும். நெல் பயிர்கள் பூப்பதற்கு 15 நாட்களுக்கு முன்பும் பூக்கும் தருவாயிலும் ஏக்கர் ஒன்றுக்கு 200 கிராம் மோனோ அம்மோனியம் பாஸ்பேட் மற்றும் 100 கிராம் பொட்டாசியம் குளோரைடு கலவையை தெளிக்க வேண்டும்.

திருக்கழுக்குன்றம் வட்டாரத்தில் பல்வேறு கிராமங்களில் தற்போது தண்ணீர் தட்டுப்பாடு அதிகம் உள்ளது. பயிர்களுக்கு ஈரப்பதம் அவசியம். எனவே, காய்ச்சலும் பாய்ச்சலுமான ஈரப்பதத்தை விவசாயிகள் கடைபிடிக்க வேண்டும்.

செங்கல்பட்டு மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் தலைமையில் வேளாண்மை துணை இயக்குநர் (மாவட்ட ஆட்சியர் நேர்முக உதவியாளர்) வேளாண்மை உதவி இயக்குநர் (தரக் கட்டுப்பாடு), திண்டிவனம் எண்ணெய் வித்துக்கள் ஆராய்ச்சி நிலையத்தின் பேராசிரியர் மற்றும் தலைவர் கணேசன், வேளாண்மை அறிவியல் நிலையம் காட்டுப்பாக்கத்திலிருந்து விஞ்ஞானிகள் முனைவர் சந்தோஷ்குமார் மற்றும் முனைவர் வெங்கடேஸ்வரி, திருக்கழுக்குன்றம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் மற்றும் வட்டார அலுவலர்கள் தண்ணீர் தட்டுப்பாடு குறித்தும் நெல் பயிர்களின் தற்போதைய நிலை குறித்தும் 16.07.26 அன்று ஆய்வு செய்தனர்.

தற்போது நிலவும் அதிகப்படியான வெப்பத்தினாலும் மற்றும் அனல் காற்றின் காரணமாகவும் இலை சிலந்தி மற்றும் பாக்டீரியல் இலைகருகல் நோய் தாக்கம் ஒரு சில கிராமங்களில் உள்ளது. இலை சிலந்தி கட்டுப்படுத்த ஏக்கர் ஒன்றுக்கு சல்பர் 80% நிறூ 300கி மற்றும் புரோப்பர்கைட் 57% EC 300 மிலி மருந்தினை தனித்தனியாக 10 லிட்டர் தண்ணீரில் கரைத்து டாங்க் ஒன்றுக்கு தலா ஒரு லிட்டர் வீதம் ஊற்றி ஏக்கருக்கு 10 டாங்க் தெளிக்க விவசாயிகளுக்கு விஞ்ஞானிகள் அறிவுறித்திருந்தனர். பாக்டீரியல் இலைகருகல் நோயை கட்டுப்படுத்த ஏக்கர் ஒன்றுக்கு பாக்ட்ரி மைசின் 100 கிராம் மருந்து அல்லது காப்பர் ஹைட்ராக்ஸைடு 53.8% DF மருந்து ஏக்கர் ஒன்றுக்கு 400 கிராம் வீதம் ஏதேனும் ஒன்றை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து மாலை நேரங்களில் தெளித்து பாக்டீரியல் இலைகருகல் நோயை கட்டுப்படுத்த விஞ்ஞானிகள் அறிவுறுத்தினர். மேலும் குருத்துப்பூச்சி மற்றும் இலைசுருட்டுப்புழு இருந்தால் குளோரோட்ரனிலிப்ரோல் 18.5% SC மருந்தினை ஏக்கர் ஒன்றுக்கு 60 மிலி வீதம் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளித்து பூச்சியை கட்டுப்படுத்த வேளாண் விஞ்ஞானிகள் விவசாயிகளுக்கு அறிவுறுத்தியுள்ளனர்.

# Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |
|---|---|---|---|---|

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**